# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தம்)

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2014, மாச்சு மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **297 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 008077 -350 (2014/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், 2007 ஆம் ஆண்டின், 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அட்டவணையின் சட்டப்பயனானது, அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லையை 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்துக்கு விரிவாக்குதலாகும்.

## விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தம்)

*ச.வ.ஒ. 10/2014*

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப்பெயர்.*

**2.** 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்திற்கான அட்டவணையானது, அவ்வட்டவணையின் 6 ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

> “7. 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டம்.”.

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்திற்கான அட்டவணையினைத் திருத்துதல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

2-PL 008027 -225 (2014/03)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்